வடக்கு மாகாண சுகாதார அமைச்சு சுற்றறிக்கை இலக்கம் : 04/2023

எமது இல : NP/04/01/Mis/AyM/15
திகதி : 02.05.2023

## சுகாதார அமைச்சு – வடக்கு மாகாணம்

### வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தில் வெற்றிடம் ஏற்படும் பதவிகளுக்கான நியமனம் (உள்ளக ரீதியாக)

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 27.10.2020ம் திகதிய 2199/10 இலக்க வர்த்தமானி பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் 04.10.2021ம் திகதிய 2248/9 இலக்க அதன் முதலாவது திருத்தம் ஆகியவற்றிற்கு அமைவாகவும் **வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களிடமிருந்து பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.**

கோரப்பட்ட தகைமைகளை 30.04.2023 இல் பூர்த்திசெய்துள்ளவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். **விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 24.05.2023.**

2. பதவி வெற்றிட விபரம்

| பதவி | வெற்றிட எண்ணிக்கை | விபரம் |
|---|---|---|
| மேற்பார்வை சமூக மருத்துவ உத்தியோகத்தர் | 1 | இணைப்பு I இல் வெற்றிட விபரங்கள் இணைக்கப்பட்டுள்ளது |
| வைத்திய அத்தியட்சகர் | 5 | |
| மருத்துவ பொறுப்பதிகாரி (அச்சுவேலி மருந்துற்பத்திபிரிவு) | 1 | |

3. தெரிவுசெய்யப்படுவதற்கான நிபந்தனைகள்

3.1. விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்காக வடமாகாண சுகாதார அமைச்சினால் நியமிக்கப்படும் நேர்முக பரீட்சை சபையினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

3.2. விண்ணப்பதாரி இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் மருத்துவ உத்தியோகத்தர் தரம் I அல்லது தரம் II இல் உள்ள அலுவலராக இருத்தல் வேண்டும்.

3.3. மேற்பார்வை சமூக மருத்துவ உத்தியோகத்தர், வைத்திய அத்தியட்சகர் மற்றும் மருத்துவ பொறுப்பதிகாரி ஆகிய பதவிகளுக்கு தரம் I இல் உள்ள அலுவலர்களின் தகுதியான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத பட்சத்தில் நேர்முக பரீட்சை குழுவின் தெரிவு பட்டியலுக்கமைய தரம் II இல் உள்ள அலுவலர்கள் பதிற்கடமை அல்லது கடமையை கவனித்தல் அடிப்படையில் நியமனம் செய்யப்படுவார்.

3.4. விண்ணப்பதாரி இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் திகதிக்கு உடன் முன்னரான 5 வருட காலத்தில் திருப்திகரமான சேவையை மேற்கொண்டிருத்தல் வேண்டும்

3.5. குறித்த வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கும் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்ப படிவங்களை தமது திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும். திணைக்களத் தலைவரினால் சிபார்சு செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3.6. விண்ணப்பதாரிகள் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

4. தெரிவு நடைமுறைகள்

4.1. இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரிசீலிக்கப்பட்டு தேவையான தகைமைகள் இல்லையென தெரியவருமிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4.2. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் (Merit) சேவை நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

4.3. விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் அடிப்படையில் உரிய புள்ளிகளை பெற்றுக்கொள்வதற்கு தேவையான தகைமைகளை நிரூபிக்க அவசியமான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களை தயார்ப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் நேர்முக பரீட்சையின் போது நேர்முக பரீட்சைக் குழுவினரின் முன் அவற்றை சமர்ப்பித்தல் வேண்டும். ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு ஏற்படும் தாமதங்களுக்கு சுகாதார அமைச்சு பொறுப்பேற்க மாட்டாது.

4.4. தகைமைகளை சான்றுப்படுத்துகின்ற சகல ஆவணங்களையும் நேர்முகத்தேர்வு இடம்பெறும் தினத்திலேயே சமர்ப்பித்தல் வேண்டும். நேர்முகத் தேர்வின் போது சமர்ப்பிக்கப்படாத ஆவணங்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

5. தவறான தகவல்களை வழங்குதல்

விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். நேர்முகப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் நேர்முகப்பரீட்சைக்கு முன்னரோ, நேர்முகப்பரீட்சையின் போதோ அல்லத நேர்முகப்பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துசெய்யப்படும்.

6. விண்ணப்பிக்கும் முறை

6.1. இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கமைய (A4 அளவு) விண்ணப்பங்களை தயார்ப்படுத்தல் வேண்டும்.

6.2. உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாதவையும், பிழையான அல்லது முழுமையுறாத விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களுமின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்திசெய்ய தவறுவதனால் ஏற்படும் விளைவுகளுக்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்திசெய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6.3. முறையாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 24.05.2023 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக **"செயலாளர், சுகாதார அமைச்சு, வடமாகாணம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்"** என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6.4. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தில் வெற்றிடம் ஏற்படும் பதவிகளுக்கான நியமனம்" என குறிப்பிடப்பட வேண்டும்.

7. விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.
   - தேசிய அடையாள அட்டை
   - செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்)
   - செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

8. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத விடயங்களில் கருதப்படுகின்ற அல்லது கருதப்படாத ஏதேனும் தெளிவின்மை சம்பந்தமாக மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதே போன்று ஏதேனும் விசேட காரணங்களின் நிமித்தமாக குறித்த நேர்முகப்பரீட்சையை நடாத்த முடியாமல் போகும் பட்சத்தில் அது சம்பந்தமாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

9. சேவையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்புவது சம்பந்தமான முடிவு வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

திருமதி.ச.மோகநாதன்
செயலாளர்
சுகாதார அமைச்சு, வடக்கு மாகாணம்.

திருமதி. ச. மோகநாதன்
செயலாளர்
சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை
சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு
வடக்கு மாகாணம்